2009 ஜூலை 21] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

9. அரசினர் தீர்மானங்கள்

(அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட, 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2009) மற்றும் 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஜல்லிக்கட்டினை முறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2009) ஆகியவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2009 ஜூலை 21

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (குறுக்கீடுகள்)

10. சட்டமன்ற முன்னாள் மற்றும் இந்நாள் உறுப்பினர்கள் தொடர்பான அறிவிப்புகளுக்கு நன்றி தெரிவித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (குறுக்கீடு) திரு. சி. ஞானசேகரன், என்ன? (குறுக்கீடு) அதுதான் மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றியாகிவிட்டதே? சரி, சொல்லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் கடந்த மூன்று ஆண்டுகளாகப் பணியாற்றிய பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்று, சென்னைக்குப் பக்கத்தில், எங்காவது வீட்டு வசதி வாரிய இடத்தில், M.L.A's Colony என்ற அமைப்பை உருவாக்குவதற்கு அறிவிப்பை வெளியிட்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக—செல்வி பாலபாரதி and their group தவிர, மற்றவர்கள் நாங்கள் அனைவரும், ஏனென்றால் அவர்கள் சார்பாகச் சொல்லிவிட்டால் சண்டைக்கு வந்துவிடுவார்கள்—எனவே, பெரும்பான்மையாக இருக்கக்கூடிய எங்கள் அனைவரின் சார்பாக எங்களது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளோம். அதேபோல், 5,000 ரூபாய் சம்பள உயர்வுக்கும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய வறுமையினைப் போக்க அவர்களுடைய வாழ்வு நிலையைப் பூரணமாக அறிந்து, ஆராய்ந்து அவர்களுக்கு இப்போது ஓய்வூதியத் தொகையை உயர்த்திக்கொடுத்ததற்கும், Medical Allowance உயர்வுக்கும், குடும்ப வாரிசுகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய குடும்ப ஓய்வூதிய